**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.44/2026**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw2/Pw1 |
| Name | : செல்லப்பன் |
| Father/Husband's Name | : மாரி |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 35 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.05.2026.

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மறைமலைநகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.06.2025 ம் தேதி காலை 11 மணியளவில் தினேஷ் காவல் உதவி ஆய்வாளர் தலைமையில் நானும் என்னுடன் செந்தில் குமார் முதல்நிலை காவலர் 1802 ஆகியோர்கள் VGN Apartments அருகே இருந்த போது ஒரு நபர் வெள்ளை நிற பையில் ஏதோ பொருட்களுடன் நின்றுக் கொண்டிருந்தார் எங்களை பார்த்தஉடன் ஓட ஆரம்பித்தார். அவரை மடக்கி பிடித்து காவல் உதவி ஆய்வாளர் விசாரித்தார். அவர் பெயர் மகேந்திரன் த/பெ.வெள்ளை என்று கூறினார். ஆஜர் எதிரி தான் அவர். காவல் உதவி

ஆய்வாளர் ஆஜர் எதிரி வைத்திருந்த வெள்ளை நிற பையில் என்ன வைத்திருந்தார் என்று சோதனை செய்த போது அதில் 10 Old chef மதுபாட்டில்கள் மற்றும் 5 Mclenc மதுபாட்டில்கள் தலா 180 மி.லி. மொத்தம் 15 மதுபாட்டில்கள் இருந்தது. காவல் உதவி ஆய்வாளர் விசாரித்த போது டாஸ்மார்க் கடையில் இருந்து மதுபாட்டில்களை வாங்கி அதிக விலைக்கு விற்க வைத்திருப்பதாக சொன்னார். காலை 11.45 மணிக்கு ஆஜர் எதிரியை கைது செய்து 12 மணியளவில் கைப்பற்றுதல் மகசர் மூலம் 15 மதுபாட்டில்களை கைப்பற்றினார்.

2. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகசர் **அதசா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கு நானும் செந்தில்குமார் முதல் நிலைகாவலரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். மதியம் 12.30 மணியளவில் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட பொருளுடன் காவல் நிலையம் வந்தோம். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**குறுக்கு விசாரணை:**</u>

1. நானும் காவல் உதவி ஆய்வாளரும் எதற்காக சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் மது விலக்கு சம்மந்தமாக வழக்கு பதிவு செய்ய சென்றோம். யாருடைய உத்தரவின் பெயரில் சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் காவல் உதவி ஆய்வாளர் உத்தரவின் பெயரில் சென்றோம். பொது

நாட்குறிப்பில் குறிப்பு வைத்து சென்றோம். இந்த விவரத்தை நான் விசாரணையில் சொல்லவில்லை. சம்பவ இடத்தில் காலை 11 மணியளவில் இருந்தோம். VGN Apartments பொதுமக்கள் நடமாட்டம் இருக்கும் இடம் என்றால் சரிதான். அங்கு தான் எதிரி வெள்ளை பையுடன் நின்று கொண்டிருந்தார் என்றால் சரிதான்.

2. அவர் நின்று கொண்டிருந்தார் அவரிடம் யாரும் பாட்டிலை வாங்கவில்லை என்றால் சரிதான். எதிரி ஓட ஆரம்பித்த உடன் யார்யார் சென்று பிடித்தோம் என்றால் நான் காவல் உதவி ஆய்வாளர் மற்றும் முதல் நிலை காவலர் ஆகியோர் ஏரிக்ரை ஓரமாக பிடித்தோம். ஏரிக்கரை ஓரமாக பிடித்தோம் என்ற விவரத்தை விசாரணையில் சொல்லி இருக்கிறோமா என்றால் ஓடிப் பிடித்தோம் என்று தான் சொல்லி இருக்கிறேன். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பாட்டில்கள் மது பாட்டில்கள் என்பதை குறித்து ஆய்வுக்கு அனுப்பப்பட்டதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எதிரி எந்த டாஸ்மார்க் கடையில் வாங்கினார் என்பதும் அந்த ஊழியர் கைது செய்யப்பட்டாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எந்த டாஸ்மார்க் கடை என்று நான் விசாரித்தேனா என்றால் நான் விசாரிக்கவில்லை. பொதுமக்களை ஏன் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் அவர்கள் முன்வரவில்லை. யார் யாரை சாட்சியாக இருக்கும் படி குறிப்பிட்டு பெயர் விவரங்கள் தெரியுமா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பெயர்களை பதிவு செய்யவில்லை.

கைப்பற்றுதல் மகசரில் எங்கு வைத்து கையெழுத்து போட்டேன் என்றால் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். சம்பவ இடத்தில் வைத்து போடவில்லை. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், அவ்வாறு சம்பவம் நடக்கவில்லை என்றாலும், வீட்டில் இருந்தவர் மீது தவறாக வழக்கு புள்ளி விவர கணக்கிற்காக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டு என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu